# சிறுவர் அமுதம்

19 05 99

எண்ணம் 10 கிண்ணம். 5



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

"மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வெனலாமோ?"
-மகாகவி.சுப்பிரமணியபாரதி-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

காலம் பொன்னானது. கடமை கண்ணானது என்பார்கள். படிக்கும் வேளையில் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். விளையாடும் வேளையில் விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டும். படிக்கும் வேளை விளையாட்டிலோ, விளையாடும் போது படிப்பிலோ கவனம் சென்றால் இரண்டுமே தரம் குறைந்து விடும். படிப்பில் ஆசிரியர்கள் முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

பெற்றோர்களுக்கும் அதில் சமபங்கு இருக்கின்றது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் இருவரினவும் சொற்படி நடந்து சமூகத்தில் நல்லவர்களாக வாழ்வது இளம் சமூகத்தினரான உங்களிடம் தான் இருக்கிறது. ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது என்பதற்கு உதாரணமாக இராயணத்தில் ஒரு கதை உண்டு.

இராமன் மிதிலையில் வில்லை வளைத்து முறித்து விட்டான். வலிமை மிக்க வீரனான அவன் யார்? என்று வினாவுகிறான் சீதையின்

தந்தையாகிய ஜனகன். அவன் அயோத்தி மன்னன் தசரதனின் மகன் என்பது தெரிய வருகிறது. உடனே ஜனகனுக்குத் தயக்கமாக இருந்தது. தசரதன் பல மனைவியரை மணந்தவன். அவனின் மகனுக்கு மகளை எப்படி மணம் செய்து கொடுப்பது? அப்போது விஸ்வாமித்திரர் ஜனகனிடம் பெற்றவனைப் பற்றிச் சிந்திக்காதே! அவனுக்குக் கல்வி கற்பித்தவர் பெரியவராகிய வசிட்டமகரிஷி. அவரின் மாணவன் குறை கொணஇடவனாக இருக்க மாட்டான் என்று ஜனகனிடம் கூறினாராம்.

இக் கதையினால் ஒருவனது வாழ்க்கையில் குரு அதாவது ஆசிரியர் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றார் என்பது தெரிகின்றதல்லவா? ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயுள்ள தொடர்பும் உங்களுக்குப் புரிகின்றதல்லவா? ஆதலினால் படிக்கும் வேளையில் படித்துக் கொள்ளுங்கள். வேறெதை நான் உங்களுக்குக் கூற முடியும்.

-ஆசிரியை-

> பசியுள்ள புலியிடமும், பாசமுள்ள பெண்ணிடமும் தப்ப முடியாது.
>
> -எர்னஸ்ட்-

# அதிசய வீடு

வீட்டை முதுகில் தூக்கிடுவார்,
மெல்ல மெல்ல சென்றிடுவார்!
ஆற்றில் நீந்தி வீட்டுடனே
அக்கரை கூடச் சேர்ந்திடுவார்.

இரும்பைப் போன்றது அவர் வீடு
எவரும் அசைக்க முடியாது!
குறும்புச் சிறுவர் கல்லெறிந்தால்,
கொஞ்சமும் உடைய மாட்டாது.

காற்றில் கூரை பறக்காது,
கனைத்த மழையில் நனையாது,
ஓட்டு வீடே ஆனாலும்
ஒருவர் தானே வசித்திடலாம்!


யார் வீடு அது?

ஆமாம், அந்த வீடு
யார் வசிக்கும் வீடு?
ஆமை முதுகு ஓடு!
அதுவே அதற்கு வீடு.

-அழ.வள்ளியப்பா-



## முன்னேறு



தாமோதரன் ஒரு சில்லறை வியாபாரி. அவர் தனது வியாபார விஷயமாக அடுத்த நகரத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் சென்றவேளை மத்தியான நேரமாக இருந்தபடியால், அந்த நகரத்திலுள்ள உணவு விடுதிக்குச் சென்று உணவருந்தினார். அப்போது அவரருகில் இளைஞன் ஒருவனும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சாப்பிடும் போது அருகில் இருப்பவரோடு பேசிக் கொண்டு சாப்பிடுவது தாமோதரன் வழக்கம். அன்றும் அந்த இளைஞனிடம் பேசிக் கொண்டே சாப்பிடலானார். தன்னை நம்பியே தனது குடும்பம் இருப்பதாகவும், தனக்கு வேலையில்லாததால் குடும்பம் மிகவும் கஷ்டப்படுவதாகவும் அவன்

கவலையோடு கூறினான். தாமோதரனுக்கு இரக்கமாக இருந்தது. அவனிடம் தன்னிடம் இருந்த பணத்தில் ஒரு தொகையைக் கொடுத்து, "ஏதாவது தொழிலைத் தொடக்கி முன்னேறிக் கொள்." என்றார்.

சிறிது மாதங்கள் சென்றன. திரும்பவும் தாமோதரன் அந்த நகரத்துக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது, "ஐயா! ஐயா!" என்று அழைக்கும் குரல் கேட்டுத் தாமோதரன் திரும்பிப் பார்த்தார். இளைஞன் ஒருவன் அருகில் வந்தான். அருகில் வந்தவனை யார்? என்று தெரியாமல் பார்த்தார் தாமோதரன்.

"ஐயா, என்னை உங்களுக்குத் தெரியவில்லை. அதோ தெரிகின்ற உணவு விடுதியில் நாங்கள் சந்தித்தோம். என்னை யாரென்றும் பாராமல் பணம் தந்து தொழில் செய்து முன்னேறும்படி கூறினீர்களே! ஞாபகம் இல்லை." என்றான். "ஆமாம், அதற்கென்ன?" என்றார் தாமோதரன். "ஒன்றுமில்லை அதே தொகைப் பணத்தை இன்னொருதரம் தந்து முன்னேறும்படி சொல்ல முடியுமா?" என்றான் அந்த இளைஞன். அவன் பேச்சில் தான் ஏமாறி விட்டதை எண்ணித் திகைத்து நின்றார் தாமோதரன்.




## அழகுக்காக......

உலக அழகியாக இன்றுவரையில் பேசப்படும் எகிப்திய ராணியான கிளியோபற்றா உடல் அழகிற்காகப் பாலில் குளித்ததாகக் கூறுவார்கள். ஹங்கேரி(UNGARN) நாட்டின் அரசியாக இருந்த எலிசபெத், அழகிய உடலுக்காகக் கொலை செய்தாளாம்.

அந்த நாட்டில் இருந்த பைதோர் என்ற இனத்தைச் சேர்ந்த் பெண்கள் உடல் வனப்பிற்குப் பேர் போனவர்கள். அவர்களின் அழகிய தோற்றம் அரசிக்கு விபரீதமான சிந்தனையைக் கொண்டு வந்தது. சிறு வயதிலேயே அந்த இனத்துப் பெண்களைச் சிறைப்பிடித்து வந்து அவர்களுக்கு நல்ல சாப்பாடு கொடுத்து வளர்ப்பார்கள். பின் அவர்களின் உடலைக் கீறி இரத்தத்தைப் பெரிய தொட்டியில் சேகரித்து அந்த இரத்தத்தில் குளித்தாள். அவர்களின் இரத்தத்தில் குளித்தால் தானும் அழகிய உடலைப் பெறலாம் என்று அவள் நம்பினாள்.

இது யாருக்குமே தெரியாமல் இரகசியமாகவே இருந்து வந்தது. ஒருநாள் அரசருக்கு இது தெரிந்தது. அரசி பிடிபட்டாள். வழக்கு நடந்தது. அறுநூறு பேருக்கு மேல் அரசி கொலை செய்திருந்தாள்.

பரீட்சை



வகுப்பறை மிகவும அமைதியாக இருந்தது. இதுவரை வகுப்பறை அமைதியாக இருந்ததில்லை. பூகோள ஆசிரியர் கூண்டுக்குள் இருக்கும் புலியைப் போல அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார். இன்று வகுப்புக்குக் கல்வி அதிகாரி மாணவர்களின் தரத்தை அறிவதற்காகக் கல்லூரிக்கு வர இருக்கிறார். அதனால் எல்லாஆசிரியர்களும் மாணவர்களும் ஏன்?........ அதிபரும் கூடத்தான் பதட்டத்துடன் காணப்படுகின்றார்கள்.

கல்வி அதிகாரி வந்து இறங்கினார். அவருக்குத் தடல்புடலாக வரவேற்பளித்தார்கள். முதல்முதலாக பூகோளபாடம் நடக்கும் வகுப்பறைக்குள்ளேயே முதலில் நுழைந்தார். பதட்டத்துடன் எழுந்து நின்று மாணவர்கள் வரவேற்றார்கள். பூகோள பாடம் நடந்து கொண்டிருந்த படியால் கல்வி அதிகாரியும்

பூகோளபாடத்திலேயே கேள்வி கேட்க விரும்பினார். ஒரு மாணவனைப் பார்த்து, "நாம் பூமியில் வாழுகின்றோம். பூமியின் வடிவம் எப்படி இருக்கும் என்று கேட்டார்.

விடை மாணவனுக்குத் தெரியும். ஆனாலும் பதட்டத்தினால் கேள்விக்கான விடை சொல்லாமல் விளித்தான். ஆசிரியருக்கோ அவமானமாக இருந்தது. அவனுக்குத் தந்திரமாக விடையை அறிவிப்பதற்காகத் தன் உருண்டை வடிவமுடைய மூக்குப்பொடி டப்பாவை அவனுக்குக் காட்டினார். அவன் பதட்ட நிலையிலேயே பதிலைச் சொன்னான். "பூமி உருண்டை வடிவாக இருக்கும். சில நாட்களில் சதுர வடிவமாகவும் இருக்கும்" என்றான்.

வகுப்பில் இருந்த எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். மாணவனோ "திருதிரு"வென்று விழித்தான். பின் அவனும் சிரித்தான். ஏனெனில் அவன் பதட்டத்தில் கல்வி அதிகாரி கேட்ட கேள்வியையே மறந்து விட்டான். ஆசிரியரிடம் இரண்டு பொடி டப்பாக்கள் இருந்தன. ஒன்று சதுர வடிவமானது. இரண்டு பொடி டப்பிகளையும் மாறிமாறி அசிரியர் கொண்டு வருவது வழக்கம். அந்த நினைவிலேயே பதிலையும் அவன் சொல்லி விட்டான்.

படித்து ரசித்ததை எழுதியனுப்பியவர்:
பாமினி அருள்வரதன்



குந்திதேவியும் மற்றைய பெண்களும் சேர்ந்து பகாசுரனுக்குக் கொண்டு செல்ல உணவு தயாரித்தார்கள். பெரிய கொண்டாட்டங்களுக்கு உணவு தயாரிப்பது போல விதவிதமாக உணவுகள் தயாரிக்கப் பட்டன. உணவைத் தயாரித்ததும் எல்லோரும் மகிழ்வோடு உணவு அருந்தினர். பின் வீமன் தாயாரின் சொற்படி பகனுக்கு உணவு கொண்டு செல்ல ஆயத்தமானான்.

சிவப்பு நிற ஆடை உடுத்தி, அதே நிறத்தில் மாலை அணிந்து திமில் பருத்த இரு எருதுகள் பூட்டிய அழகிய வண்டியில் ஏறிக் கொண்டு பகன் இருக்கும் இடத்தை அடைந்து வண்டியை நிறுத்திப் பகன் இருக்கும் வசிப்பிடத்தைத் தேடினான். அப்போது பகன் யமுனை ஆற்றின் கரையில், குன்றிலுள்ள குகையில் இருந்தான். நல்ல மத்தியானவேளை. உணவு வரத் தாமதமாகிய படியால் பசியோடும், கோபத்தோடும் வழியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வீமனும் பகனைக் கண்டு கொண்டான். அவனுடைய தோற்றமும், அமர்ந்திருந்த நிலையும் பகனைப் முதுகுப் பக்கமாகவே காணக்கூடியதாக இருந்தது. பின்புறமாகவே சென்று அவனைக் கட்டியணைத்து இறுக்கிக் கொன்றுவிட வேண்டும் போல இருந்தது. ஆனால் அதைச் செய்யாமல், கொண்டு வந்த பகனுக்கான உணவைத் தான் உண்ணத் தொடங்கினான். பசியால் துடித்துக் களைத்துவிட்ட பகன் அங்குமிங்கும் தனக்கான உணவைத் தேடினான்.

தனக்காகக் கொண்டு வந்த உணவை வண்டிக்காரனே உண்பதைக் கண்டதும் பகனுக்குக் கோபம் அதிகரித்தது. உடனே வீமனை நோக்கி, "அடே மனிதப்பயலே! என்ன செய்கிறாய்?. எனக்கு உணவைக் கொண்டு வந்து விட்டு நீ உண்கிறாயே.


உனக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும். என்னை என்ன கோழை என்றா நினைத்துக் கொண்டாயா?" என்று சொல்லிக் கொண்டே, வீமனின் பிடரியில் குத்தினான். பலமாக அடித்தான்.

எதையும் பொருட்படுத்தாமல் வீமன் கொண்டு வந்த உணவைத் தன் வயிறார உண்டு விட்டுத் திரும்பினான். அது வரையில் பகன் வீமனுக்குத் அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தான். பகன் பசியாலும், வீமனை அடித்து, உதைத்துத் துன்புறுத்தியதால் நன்றாகச் சோர்ந்து விட்டான். வீமனுக்கு இவ்வேளையில் அவனைக் கொல்லுவது சுகமாக இருந்தது. பகனைத் தன் இரு கைகளினாலும் குத்தினான். "இடும்பவனத்தில் இடும்பனைக் கொன்றவன் நான். என் பலத்தையா சோதித்தாய் நீ?" என்று சொல்லிக் கொண்டே பகனின் மார்பில் ஓங்கிக் குத்தினான்.

இருவருமே பலம் கொண்டவர்களான படியால் சண்டை மூர்க்கமாக நடைபெற்றது. இறுதியில் பகனை வீமன் அவனது மார்பில் உதைத்துக் கொன்றான். பின் பகனது உடலை வண்டியில் கிடத்திக் கொண்டு வேத்திரகீய நகரத்துக்குள் பிரவேசித்தான். வந்த வீமனைத் தாயாகிய குந்தியும், சகோதரர்களும் தழுவிக் கொண்டனர். நகரத்து மக்களும் வீமனை ஆரவாரமாக வாழ்த்தி வரவேற்றார்கள்.

(தொடரும்)

# வானம்பாடியும் குஞ்சுகளும்



சுப்பிரமணியம் தன் மகன்களோடு வயலுக்கு வந்தார். தினைகள் செழித்து வளர்ந்திருந்தன. அறுவடைக்கு இன்னும் நாளிருக்கிறது என்று சொல்லிக் கொண்டே திரும்பி நடந்தனர் சுப்பிமணியமும் மகன்களும். இதை வானம்பாடிப் பறவைத் தம்பதியினர் கவனித்துக் கொண்டிருந்தன. அவர்கள் போனதும் வானம்பாடிப் பெண் ஆணிடம், "அவர்கள் அறுவடை செய்வதற்கு நாட்கள் இருக்கின்றன. அதற்கிடையில் நாங்கள் குழந்தைகள் பெற்று வளர்த்தும் விடலாமே?" என்றது. ஆண் வானம்பாடியும் ஒப்புக் கொண்டது.

தினைப்பயிர்களுக்கு நடுவே இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொண்டன வானம்பாடிகள். வானம்பாடி முட்டை இட்டுக் குஞ்சுகளும் பொரித்துக் கொண்டது. தினைப்பயிரும் முற்றும் நிலைக்கு வரத்தொடங்கியிருந்தது. தந்தை வானம்பாடி திடீரெனக் காணாமல் போய் விட்டது. அதனால் தாய் தன் குஞ்சுகளிடம் ஒருநாள், "குழந்தைகளே! நான் இல்லாத வேளைகளிலும் வயல் சொந்தக்காரர்கள் வயலைப் பார்க்க வருவார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனமாகக் கேட்டு என்னிடம் சொல்ல வேண்டும் என்று கூறியிருந்தது.

தாய் இரை தேடச் சென்றிருந்த வேளையில் சுப்பிரமணியமும் பிள்ளைகளும் வந்தனர். தந்தை மூத்தமகனைப் பார்த்து "கதிர்கள் பதத்திற்கு வந்து விட்டது. அதிகாலைவேளையில் அறுவடை செய்ய வேண்டும். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் சொல்லி வை." என்று சொன்னார். தாய்ப்பறவை வந்ததும் குஞ்சுகள் தாயிடம் விஷயத்தைக் கூறின. தாய் எதுவும் யோசிக்காமல் இரையைப் பிள்ளைகளுக்கு ஊட்டியது.

அப்போது முதல் குஞ்சு தாயைப் பார்த்து "அம்மா நீங்கள் இல்லாத வேளையில் அவர்கள் வந்தால் நாங்கள் என்ன செய்வது?" என்று கேட்டது. "இனியும் வேளை வந்து விடவில்லை. அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை நம்பி அறுவடை செய்யப்

போகிறார்களா? நாளைக்கு அறுவடை நடக்காது." என்று கூறியது. அடுத்து இரண்டாம்நாள் தந்தையும் மூத்தமகனும் வந்தார்கள். "பக்கத்தில் உள்ளவர்களை நம்ப முடியாது. நீ நாளைக்கு நம் உறவினர்களை வரச் சொல்லி விடு." என்று தந்தை மகனிடம் கூறினார். அன்று மாலையில் தான் தாய் வந்தது.

தாயிடம் பயந்தவாறே குஞ்சுகளும் விஷயத்தைக் கூறின. அப்போது தாய் குஞ்சுகளிடம், "பயப்படாதீர்கள் மக்களே! அவர்களுக்குத் தங்கள் தங்கள் வேலையில்லையா? இவர்கள் கேட்டவுடன் அவர்கள் ஓடி வந்து விட மாட்டார்கள். ஆனாலும் இனி எச்சரிக்கையுடன் தான் இருக்க வேண்டும்." என்று சொல்லித் தன் சிறகுக்குள் மக்களை வைத்துக் கொண்டது.

அடுத்த நாள் சுப்பிரமணியமும் மக்களும் வந்தார்கள். தினைக்கதிர்கள் மண்ணில் சாயும் நிலையில் இருந்தன. அப்போது தந்தையைப் பார்த்த மூத்தமகன் "அப்பா, பக்கத்தில் வாழ்பவர்களையும், உறவினர்களையும் இனி நம்பிப் பயனில்லை. நாளைக்கு அதிகாலையில் நாங்களே அறுவடையைச் செய்து கொள்ளுவோம்." என்றார். தந்தையும் "அதுதான் சரி மகனே! நாளைக்காலையில் வேலையைத் தொடங்குவோம்." என்று கூறிச் சென்றனர்.

இரையோடு வந்த தாயிடம் குஞ்சுகள் நடந்தவற்றைக் கூறின. அப்போது தாய் மக்களிடம், "நாளைக்குக் கட்டாயம் அறுவடை நடக்கும். குழந்தைகளே, விரைவாகச் சாப்பிடுங்கள். நாங்கள் தங்குவதற்கு வேறிடம் போக வேண்டும்." சாப்பாடு முடிந்ததும் குஞ்சுகளை அழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றது. அடுத்த நாள் அறுவடை வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

எவருமே பிறரை நம்பிக் காரியங்கள் நடக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கின்ற வரையில் காரியங்கள் எதுவும் நடப்பதில்லை. நம்முடைய காரியங்களில் நாமே கவனம் செலுத்துகின்றபோதுதான் அந்தக் காரியங்கள் விரைவாகவும் சிறப்பாகவும் முடிகின்றன.

☸ பரிமளா பட்டோலி என்ற இளம் பெண் இமயமலையில் உள்ள சிகரத்தைத் தன் குழுவோடு சென்று தொட்டு விட்டுத் திரும்பியிருக்கிறார். இதில் என்ன ஆச்சரியம் என்று நினைக்கிறீர்களா? இவர் திருமணமாகி இரண்டு குழந்தைகளைப் பெற்றவர். கண் பார்வையில்லாதவர்.

நல்ல வரவேற்பே பாதி வரவேற்புக்குச் சமம்.
-ஜார்ஜ் எலியட்-

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ | ற் | று | மை | ஆ | றி | பா | ணி | த | ப |
| வி | ப | ந் | த | ம் | டி | ட் | தி | கு | லெ |
| ல் | வ | சே | வை | ச | கோ | டா | ர | தி | கை |
| வ | ள | ம் | ன | த | கி | ளி | பா | பா | க் |
| தி | ம் | பு | வை | மா | ணி | க் | க | ம் | பி |
| ற | வ | ளி | மா | த | ர | ம | ஞ் | ச | ம் |
| வு | த | க | வு | ர | ப | வா | ழி | த் | து |
| கோ | டு | தே | ர் | பி | த | ஏ | ர | சு | ட |
| ல் | வி | ச | மா | த | வி | வா | சு | வ | டு |
| வா | ச | ம் | ன் | ணா | ண் | கு | ரை | தா | சி |

**முடிவு திகதி. 5.08.99**

## நம்பிக்கை



கௌதமபுத்தர் தன் சீடர்களுடன் மரத்தினடியில் தங்கியிருந்தார். தங்கியிருந்த போது நம்பிக்கையைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். "எதையும் நம்பிக்கையுடன் செய்ய வேண்டும். அப்போது தான் நாம் செய்யும் செயல் நல்ல பலனைத் தரும்." என்றார். சீடர்களுக்குப் புத்தர் சொல்லிய விளக்கம் சரிவர விளங்கவில்லை.

புத்தர் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். பின்பு அவர்களுக்கு அதைப் பற்றிக் கூடுதலாக விளக்கினார். "கோழியைப் பாருங்கள். அது வளர்ச்சியடைந்ததும் முட்டையிடுகின்றது. முட்டையை அடை காக்கும் வேளையில் முட்டைகள் தாமாகவே உடைவதால் குஞ்சுகள் வெளியே

வருமா? முட்டையை உடைத்துக் கொண்டு குஞ்சுகள் வெளிவருமா? என்று கோழிகள் சந்தேகம் கொள்வதில்லை.



மிகவும் நம்பிக்கையுடன் அடை காக்கின்றன. அந்த நம்பிக்கைக்குப் பலன் பெறுகின்றன. அது போலத்தான் நம்பிக்கையுடன் எதையும் செய்யும்போது அதற்குரிய பலனும் நமக்குக் கிடைக்கும்." என்று சீடர்களுக்கு விளக்கம் சொன்னார்.

சுதந்திரம் தருபவர் முன் அடங்கி இரு. அடக்குபவர் முன் சுதந்திரமாக இரு.

-ஹர்ஷன்-

எருது நிலத்தை உழுது விடுகின்றது. அதில் விளையும் தானியத்தைக் குதிரை தின்கிறது.

-சீனப் பழமொழி-

## போட்டிகளின் முடிவுகள்:

வினாவிடைப்போட்டி:
1.ஹவாய் 2.பெல்ஜியம் 3.ஆசிரியை 4.புதன் 5.சீனா

சொற்களைக் கண்டு பிடியுங்கள்:
இட-வல:
மாசி, சில, சிலந்தி, திகைப்பு, புயம், பதி, சாண், அரி, பல, சமா, மையல், யாளி, தட்டை, நம், பாம்பு, கூத்து, மட்டம், ஆரை, அவல், வல், ரதி, திசை, கசை, பகை, செடி, புள்ளி, புள், அதி, அதிகாரி.

வல-இட:
கைதி, பரி, அரண், சாதி, படி, கதை, நல், சப்பி, சரண், ஐயா, தானம், நடை, யசி, மத்து, கூகை, ஆசி, மட்டை, திரவியம், வியம்பு, ஆடி, கணி, கணிகை, அசை, கசை,

மே-கீ:
மாடி, யாசி, பாண்டி, பாண், ஐயம், ஆதி, சலி, சலிப்பு, வசை, சாமா, மாண், மல், திண், சடை, கூடம், அல், புரி, நயம், சிவிகை, கைதி, பதை, ஆரணி, களி, தாமரை, மரை, கரி.

கீ.மே:
செட்டி, பாசி, ஆடை,பசி, சதி, புகல், தண், கூடை, அபயம், பயம், நகல், விசி, நரி, காணி, கதி, திரை, கதிரை, தாளி, கலம்.

ஓரெழுத்துச் சொற்கள்:
மா, கை, சா, மா, மை, தை, தா, பா, சை, கா, சை.
இருதடவை வந்த சொற்கள்:
திகை, கைப்பு, அளி.

எழுதியவர்கள்:
சிவகாந் சிவராஜா Duisberg
ஆர்த்தி புஸ்பராஜ் Swiss
ஜெயமாலா இரத்தினசபாபதி Eschlbronn
அபிராமி நிர்மலராஜா Sindorf
சுஜீவ் சண்முகலிங்கம் Clausthal
சுஜீனா சண்முகலிங்கம் clausthal

> கடினமான பாறையை மென்மையான நீர் துளை செய்கிறது. அச் செயலே விடாமுயற்சி.
>
> -ஓவிட்-

# பகவத்கீதை



சிறுவனான அருச்சுனன் சிறந்த வீரன். ஆனாலும் அவனுக்குப் போர் செய்வதிலும், போரில் சனங்கள் இறப்பதிலும் விருப்பமில்லாமல் இருந்தது. சண்டை நல்லதா? சமாதானமாக இருப்பது நல்லதா? என்று தனக்குள்தானே யோசித்துக் கொள்ளுவான். தன் தமயனான தர்மனிடம் கேட்டான். தர்மன் அரசர்களின் தர்மத்தில் அதுவும் ஒன்று என்றான். அதையே தனக்குப் பிடிக்காதவனும், தன்னைப் பிடிக்காதவனுமான கர்ணனைக் கேட்டான்.

“சமாதானம் தான் நல்லது. சண்டை என்றால் நீ என்னால் கொல்லப்பட்டு விடுவாய்.” என்று கர்ணன் சிரித்துக் கொண்டே கூறினான். அவனின் கேலிப்

பேச்சு அருச்சுனனுக்கு வேதனையைத் தந்தது. தங்கள் குருவான துரோணாச்சாரியரிடம் கேட்டான். அவரோ, "வீரனான அருச்சுனன் கோழையாகி விடுவானோ?" என்று பயந்தார். அதனால் சண்டை செய்வது தான் நல்லது. அப்போது தான் சுத்தவீரன் என்று பெயர் கிடைக்கும் என்றார்.

பாட்டரான வீஷ்மரிடம் சென்று கேட்டான். அவர் சமாதானமே நல்லது என்றார். அவனுக்குக் குழப்பமாக இருந்தது. யார் சொல்வதைச் சரியாக ஏற்பது என்று தெரியவில்லை. பெரியவனாகிச் சிறந்த வீரனாகிப் பேசப்பட்ட பொழுதும் அந்தக் குழப்பம் இருந்து கொண்டிருந்தது. பாரதப்போர் வந்தது. எதிராளிகளோ உறவினர்களாக இருந்தார்கள்.. அருச்சுனன் கண் கலங்கினான். அப்போது தேர்ச்சாரதியாகிய கண்ணனிடம், "இதற்காகத் தானா சிறந்த வில்வீரனானேன்?" என்று கேட்டான்.

அப்போது கண்ணன் அவனுக்குத் தர்மத்தின் தத்துவத்தை விளக்கினான். அதுவே "பகவத்கீதை" என்று இன்று வரை விளங்குகின்றது.

> மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றோம். ஆனால் உறங்கவும், நல்ல கனவுகள் காணவும் ஏங்குகின்றோம்.
>
> -கலீல்கிப்ரான்-

# நோய் தீர்க்கும் மருந்து

கி.பி 476 அளவில் ரோம் சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்தது. அதன் பின்பு 16ஆம் நூற்றாண்டுவரை மருத்துவத்துறை எந்த விதமான முன்னேற்றத்தையும் அடைந்ததாகத் தெரியவில்லை. மருத்துவக்கலை மட்டுமல்ல மற்றைய கலைகளும் கூட எந்த நிலையிலும் வளர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. கிரேக்க, ரோம சாம்ராச்சியங்களின் வீழ்ச்சிக்குப் பின்னரும் அவைகளைக் காப்பாற்றிய பெருமை கிறீஸ்துவப் பாதிரிமார்களையும், அரேபிய மருத்துவர்களையும் சென்றடைகின்றது. அவர்கள் அவற்றைக் கவனிக்காது விட்டிருந்தால் இன்று அவைகளைப் பற்றி யாரும் அறிந்திருக்க முடியாது.

இவர்கள் தங்கள் தங்கள் முறைப்படியே கிரேக்க,ரோம வைத்திய சிகிச்சைகளை அடிப்படையாகக் கொண்டு பல சிகிச்சைகளைச் செய்து வந்தனர். மடாலயங்களோடு சேர்ந்த வைத்தியசாலைகள் உருவாக்கப் பட்டன. இவைகளில் நோயாளிகள் தங்கி வைத்திய சிகிச்சை செய்து வந்தனர். இப்பொழுதும் தேவாலயங்களுக்கு அருகாமையில் வைத்தியசாலைகள் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். இந்த வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் நடைபெற்றதேயன்றி விஞ்ஞான ரீதியாக



மருத்துவத்தில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் அடையவில்லை.

ஏழாம் நூற்றாண்டில் மத்தியதரைக்கடலின் கிழக்கேயுள்ள நாடுகளாலும், வடஆபிரிக்கா, ஸ்பெயின் நாட்டின் முழுப்பகுதியிலும் அரேபியரின் ஆதிக்கம் வலவடைந்திருந்தது. அரேபியர்கள் கிரேக்க வைத்தியமுறைகளைத் தம் மொழியில் மொழி பெயர்த்துக் கொண்டார்கள். தங்களின் வைத்திய முறைகளையும் கலந்து புதிய சிகிச்சை முறைகளையும் கண்டறிந்தனர்.

(study of drug) எனப்படும் மருந்து ஆராய்ச்சி முறைகளை அரேபிய மருத்துவர்கள் கண்டறிந்தனர். பேதி மருந்தாகப் பயன்படும் சென்னா, மயக்க மருந்தாகிய ஓபியம் அரேபிய மருத்துவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டன. இவை இன்றும் புழக்கத்தில் இருந்து வருகின்றன. Alcohol எனப்படும் சாராய மது வகை, (Drug) ட்றக் எனப்படும் மயக்கும் போதைமருந்துகள் இவர்களால் கண்டு பிடிக்கப் பட்டதாகும். இப் பெயர்கள் கூட அரேபியர்களிடம் இருந்து வந்தது தான்.

ஒன்பதாம் நூற்றாண்டில் ராஸஸ் (Rhazes)என்னும் அரேபிய வைத்தியர் புகழ் பெற்றிருந்ததாக அறிய முடிகின்றது.

-தொடரும்-

# தொழிலாளியின் பாடல்



பாடுபடுபவர்க்கே- இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல- நாடு
காண்பதவரல்லவோ?

மந்திரம் ஓதுவதால்- எங்கும்
வயல் விளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே- அரிசி
சாதமாயிடுமோ?

கட்டும் ஆடையாகப்- பருத்தி
காய்த்து அளிப்பதுண்டோ?
சட்டி பானையெல்லாம்- மண்ணில்
தாமே எழுவதுண்டோ?

உழுது பயிர் செய்வோன்- வயிற்றுக்கு
உணவு பற்றாமல்,

அழுதழுது நிதம்- நிற்பது
அறியீரோ, ஐயா!

ஆடை நெய்திடுவோன்- போர்க்கும்
ஆடையில்லாமல்
வாடை கொண்டு நிதம்- கிடந்து
வருந்தலாமோ, ஐயா!

வீடு கட்டும் ஒரு -கொத்தன்
விடுதியில்லாமல்
ஆடு மாடுகள் போல்- உலகில்
அலையலாமோ, ஐயா!

கோடிகோடியாக- நீங்கள்
குவித்திடும் லாபம்
வாடும் எம் மக்கள்-உண்ணா
வயிற்றுச் சோறல்லவோ!

மனம் திரியாமல்- காலை
மாலை எப்பொழுதும்
குனிந்து வேலை செய்வோர்- கும்பி
கொதிக்கலாமோ, ஐயா!

வாழ வேண்டுமெனில்- தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழை என்றொருவன்- உலகில்
இருக்க லாகாதையா!

-கவிமணி. தேசிகவிநாயகம்பிள்ளை-

## பிள்ளையாரும்
## பக்தனும்



கணபதி ஒரு நிறுவனத்தில் சேவகனாக வேலை செய்து வந்தான். வீட்டில் அன்று அவனது மகளின் முதலாவது பிறந்தநாளாக இருந்தபடியால் சந்தைக்குப் போய்ச் சாமான்கள் வாங்க வேண்டியிருந்தது. அவன் சந்தைக்குப் போகும் வேளையில், பஸ்ஸிலேயே செல்லுவது வழக்கம். அன்று விடுமுறை நாளாகையால் பஸ் ஓடவில்லை. ஆனபடியால் அவன் தனது சைக்கிளிலே சந்தைக்குச் சென்றான். சந்தையில் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டான்.

சந்தைக்குச் செல்லும் வேளையில் சைக்கிளைக் கொண்டு செல்லாமல் நடந்தோ, பஸ்ஸிலோ சென்று வரும் வழக்கமான படியால், நடந்தே விட்டுக்கு வந்து விட்டான். வீட்டில் மனைவியான லீலா அவனிடம் சைக்கிளைப் பற்றிக் கேட்டபோதுதான் அவனுக்குச் சைக்கிளின் ஞாபகம் வந்தது. திரும்ப நடந்து சந்தைக்கு வந்தான். வழியில் அரசமரத்தின் கீழே பிள்ளையார் கோயில் ஒன்று இருந்தது. சைக்கிள் கிடைத்தால், பிள்ளையாருக்கு பத்துத் தேங்காய் உடைப்பதாக வேண்டுதல் செய்து கொண்டான்.

சந்தையில், சைக்கிள் இருந்த இடத்திலேயே இருந்தது. அவனும் மகிழ்வோடு சைக்கிளை எடுத்துக் கொண்டு, பிள்ளையாருக்கு உடைப்பதற்காகப் பத்துத் தேங்காயை வாங்கிக் கொண்டு திரும்பினான். அரச மரத்தினடியில் சைக்கிளை நிறுத்தி வைத்து விட்டுப் பிள்ளையாருக்கான வேண்டுதலைச் செலுத்தினான். பக்தியோடு "அப்பனே! பிள்ளையாரே! நல்லகாலம் என் சைக்கிளைக் காப்பாற்றித் தந்தாய்" என்று வணங்கினான்.

பக்தி சிரத்தையோடு, கண்களை இறுக மூடித் தியானித்து, மூன்று முறை தலையில் குட்டினான். வீட்டுக்குச் செல்வதற்காகச் சைக்கிள் இருந்த பக்கம் திரும்பினான். சைக்கிளைக் காணவில்லை. சைக்கிளை யாரோ திருடிக் கொண்டு சென்று

விட்டிருந்தனர். கணபதி திகைத்து நின்றான். "இன்று யார் முகத்தில் விழித்தேனோ? சந்தையில் காணாமல் போயிருக்க வேண்டிய சைக்கிளை உன் சன்னதியில் காணாமல் போக விட்டேனே?. நான் தான் கண்களை மூடிக் கொண்டு உன்னைத் தியானித்தேன். நீ கண்களைத் திறந்து தானே வைத்திருந்தாய், பிள்ளையாரே?" என்று பிள்ளையாரைப் பார்த்து வேதனையோடு கேட்டான்.

பிள்ளையார் அதற்குப் பதிலா சொல்லுவார்? இருந்த இடத்தில், இருந்த மாதிரியே, பிள்ளையார் இருந்தார்.

மற்றொருவன் குணத்தைச் சித்தரிக்கையில் தான் ஒருவன் தன் குணத்தையே தெளிவாகக் காட்டுகிறான்

-ரொபின்சன்-


கேட்க நினைத்தால் மீன் வேண்டும் என்று கேட்காதே. தூண்டில் வேண்டும் என்று கேள்.

-ஜப்பான் பழமொழி-

கருணையை இழந்து விட்ட மனம் பாறையில் செதுக்கப்பட்ட பூவைப் போன்றது.

-கவிஞர் கண்ணதாசன்-

# வரி வசூல்



வடஇந்தியாவில் ஆட்சி செய்த மன்னர்களுக்குள் முகலாயச் சக்கரவர்த்தியான அக்பர் இன்று வரை போற்றப் பேசப்படுகின்றார். அவர் ஆட்சிக் காலத்தில் நடந்த சிறு சம்பவம் இந்தக்கதை.


நாட்டின் நிதிப் பிரச்சினைகளைச் சமாளிக்க நகரங்களிலும் கிராமங்களிலும் வரி வசூலிக்கப்பட்டது. துபல்ஹாதி என்ற கிராமமும் அக்பரின் ஆணைக்குள் அடங்கியிருந்தது. மிகவும் கஷ்டப்பட்ட கிராமத்து மக்கள் அவர்கள். அவர்கள் கிராமம் மிகவும் பின் தங்கிய கிராமமாக இருந்தது. அங்கு மட்டும் வரி வசூலிக்காமல் விட்டால் மற்றைய இடங்களில் ஏதாவது பிரச்சினை ஏற்படலாம் என்று நினைத்த அக்பர், அவர்கள் கிராமத்தில் என்ன கூடுதல் விளைச்சலைத் தருகின்றதோ அதை வரியாகப் பெறும்படி ஆணையிட்டார்.

அங்கு உணவுக்குப் பயன்படுத்த முடியாத ஒரு இனமீன்கள் ஆற்றில் வாழ்ந்தன. அவைகளில் ஒவ்வொரு முறையும் 2000 மீன்கள் வரியாக ஏற்கப்பட்டன. அவைகளைத் தூர இடங்களில் கொண்டு சென்று எறிவதற்கு சேவகர்கள் இருந்தார்கள். அக்பரின் இறப்புக்குப் பின்பும் இது தொடர்ந்ததாக அறிய முடிகின்றது.

Neklar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527